[2003 மார்ச் 28

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 130, திரு. வெ. கோவிந்தராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

130—

பதப்படுத்தும் தொழிற்சாலை

•23120—திரு. வெ. கோவிந்தராஜ்:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி தொகுதியில் புளி, மா பழவகைகளைப் பதப்படுத்த அரசு சார்பில் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) கிருஷ்ணகிரி தொகுதியில் புளி, மா பழவகைகளை அரசு சார்பில் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைப்பதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

திரு. வெ. கோவிந்தராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் பல புதுமைகளைப் படைத்துக் கொண்டு இருக்கின்றது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு. தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஓசூரில் மலர்களை ஏற்றுமதி செய்கின்ற மையத்தை தந்த இதய தெய்வம் டாக்டர் அம்மா அவர்களுக்கு மாவட்ட மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களுடைய மாவட்டம் புளி, மா, பலா வகைகள் அதிகமாக உற்பத்தியாகின்ற மாவட்டமாக இருந்துகொண்டிருக்கிறது. விவசாயத்தை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற மாவட்ட மக்களுடைய வருவாயைப்

2003 மார்ச் 28]

பெருக்கும் வகையில் பழ வகைகளைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கேற்ப குளிர்சாதனக் கிடங்கையும், புளியில் இருந்து சாஸ் தயாரிக்கின்ற தொழிற்சாலையையும் ஏற்படுத்த அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி பகுதியில் பழம் பதனிடும் 5 தனியார் தொழிற்சாலைகள் செயல்பட்டு வருகின்றன. கிருஷ்ணகிரி பகுதியில் 3 புளி பதப்படுத்தும் தொழிற்சாலைகளும் உள்ளன. தருமபுரி மாவட்டத்தில் 4 குளிர்பதனக் கிடங்குகள் உள்ளன. தருமபுரி மாவட்டத்தில் 28 பழப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் உள்ளன. கிருஷ்ணகிரி தொகுதியிலே விளையக்கூடிய மாம்பழத்தினுடைய 50 சதவிகிதம் பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல அங்கே புதிதாக தொழிற்சாலை தொடங்க வேண்டிய அவசியம் இல்லை என்று பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தரும்ம் புரிகிற, தரும சிந்தனை உள்ள மக்கள் வாழக்கூடிய மாவட்டம். வானம் பார்த்த பூமியாக இருக்கிற, மானாவாரிப் பயிர்களைப் பயிரிடக்கூடிய பகுதி. அதிலும் குறிப்பாக மாவட்டம் என்பது மிகவும் பின்தங்கிய, தொடர்ந்து வறட்சியாக உள்ள மாவட்டம். அந்த மாவட்டம், தென்னகத்திலேயே சுவை மிகுந்த புளி அதிகமாக விளையக்கூடிய பகுதி. அதிலும் வெளிநாடுகளுக்கு மாம்பழம் அதிகமாக ஏற்றுமதி செய்யக்கூடிய மாவட்டம். நம்முடைய அமைச்சர் அவர்கள்கூட பதில் உரையிலே இங்கே சொன்னார்கள். அங்கே வாழக்கூடிய மக்கள் எல்லாம் களி சாப்பிடக்கூடிய மக்கள். புளி அதிகம் விளையக்கூடிய மாவட்டம். இதையெல்லாம் மனதிலே கொண்டு, பின்தங்கியிருக்கிற அந்த மாவட்டத்தில் மாம்பழம் அதிகமாக, புளி அதிகமாக உற்பத்தி ஆகக்கூடிய மாவட்டத்திலே, பதப்படுத்துவதற்காக, ஏற்றுமதியைப் பெருக்கக்கூடிய வகையிலே நடப்பு ஆண்டிலே விதிகளைத் தளர்த்தி, முன்னுரிமை அடிப்படையிலே,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பின்தங்கிய மாவட்டம் என்பதைக் கருதி, இந்தப் பதப்படுத்தும் தொழிற்சாலை அவசியம் தேவை என்பதைக் கருதி அரசு இதிலே ஆர்வம் காட்டுமா, உடனடியாக அந்தப் பதப்படுத்தும் தொழிற்சாலையை அமைப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேளாண்மைத் துறையில் பல்வேறுபட்ட புதிய மாறுதல்களை உருவாக்கி வருகிறார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு அதிகமான கவனம் எடுத்து வருகிறார்கள். அந்த வகையிலே புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இதுபோன்ற தொழில்களைத் தொடங்குவதற்கு முன்வருவார்களானால் அவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசு அளிக்கும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *131*, திருமதி ஆர். சசிகலா, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

131—

ஆதிதிராவிடர் மாணவ விடுதி

***7385—திருமதி ஆர். சசிகலா:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணராயபுரம் தொகுதியிலுள்ள ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர் விடுதியில் மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.